**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, SIRKALI**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**Case No.CC.293/2024**

| | | | |
|---|---|---|---|
| Deposition of Name | சந்தியா | Prosecution | LW-1 as PW1. |
| Father Name | சரவணன் | Defence | |
| Village | காளிகாவல்புரம் | Taluk | சீர்காழி |
| District | மயிலாடுதுறை | Age | 26/2026 |

Solemnly affirmed by Tmt.R. Geetha, Grade 3 bench clerk of this Court in accordance with the provisions of Act X of 1873 of the day

**10.03.2026.**

**சத்தியபிரமாணம் பெறப்பட்டது. எதிரி ஆஜர்**

**முதல் விசாரணை**

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து திருப்பூரில் வேலை செய்து வருகிறேன். இந்த வழக்கு சம்பந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. நீதிமன்றத்தில் தற்போது என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். அதில் உள்ள விபரம் எனக்கு தெரியாது. எனவே கையொப்பம் மட்டும் அசாஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**அரசு தரப்பு சாட்சி பிறழ் சாட்சியாக மாறியதால் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டு அனுமதிக்கப்பட்டது.**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். நான் தற்போது எதிரியுடன் சமாதானம் ஆகி சமாதான மனுவில் கையொப்பம் செய்துள்ளேன் என்றால் சரிதான். நானும் ஆஜர் எதிரியும் கடந்த 2024 ம் ஆண்டு காதலித்து வந்தோம் என்றால் சரியல்ல. மேலும் எதிரியுடன் நான் பல்வேறு இடங்களுக்கு சென்று ஊர் சுற்றி வந்தோம் என்றால் சரியல்ல. ஒரு நாள் நானும் ஆஜர் எதிரியும் தனிமையில் சந்தித்த போது ஆஜர் எதிரி என்னை திருமணம்

செய்து கொள்வதாக ஆசை வார்த்தை கூறி நம்ப வைத்து என்னுடன் உடலுறவு வைத்துக்கொண்டார் என்றால் சரியல்ல. அதனால் நான் கர்பமாக இருப்பதாக எதிரியிடம் தெரிவித்து என்னை திருமணம் செய்து கொள்ள கேட்டேன் என்றாலும் அதற்கு ஆஜர் எதிரி என்னை திருமணம் செய்துகொள்ள முடியாது என்று மறுத்தார் என்றாலும் சரியல்ல. மேற்படி விபரங்களை போலிசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது எதிரியுடன் சமாதானமாகிவிட்ட படியால் எதிரியை இந்த வழக்கில் இருந்து விடுவிக்க வேண்டி பொய்சாட்சியம அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

**<u>IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, SIRKALI</u>**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**Case No.CC.293/2024**

| | | | |
|---|---|---|---|
| Deposition of Name | பரமேஷ்வரி | Prosecution | LW-2 as PW2. |
| Father Name | க/பெ. சரவணன் | Defence | |
| Village | காளிகாவல்புரம் | Taluk | சீர்காழி |
| District | மயிலாடுதுறை | Age | 40/2026 |

Solemnly affirmed by Tmt.R. Geetha, Grade 3 bench clerk of this Court in accordance with the provisions of Act X of 1873 of the day

**<u>10.03.2026.</u>**

**சத்தியபிரமாணம் பெறப்பட்டது. எதிரி ஆஜர்**

**முதல் விசாரணை**

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து விவசாய வேலை செய்து வருகிறேன். இந்த வழக்கு சம்பந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**அரசு தரப்பு சாட்சி பிறழ் சாட்சியாக மாறியதால் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டு அனுமதிக்கப்பட்டது.**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

அசா.1 எனது மகள் ஆவார். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். அசா.1 தற்போது எதிரியுடன் சமாதானம் ஆகி சமாதான மனுவில் கையொப்பம் செய்துள்ளார் என்றால் சரிதான். அசா.1ம் ஆஜர் எதிரியும் கடந்த 2024 ம் ஆண்டு காதலித்து வந்தார்கள் என்றால் சரியல்ல. மேலும் எதிரியுடன் அசா.1 பல்வேறு இடங்களுக்கு சென்று ஊர் சுற்றி வந்தார் என்றால் சரியல்ல. ஒரு நாள் அசா.1ம் ஆஜர் எதிரியும் தனிமையில் சந்தித்த போது ஆஜர் எதிரி அசா.1னை திருமணம் செய்து கொள்வதாக ஆசை வார்த்தை கூறி நம்ப வைத்து அசா.1உடன் உடலுறவு வைத்துக்கொண்டார் என்றால் சரியல்ல. அதனால் அசா.1 கர்பமாக

இருப்பதாக எதிரியிடம் தெரிவித்து அசா.1யை திருமணம் செய்து கொள்ள கேட்டார் என்றாலும் அதற்கு ஆஜர் எதிரி அசா.1னை திருமணம் செய்துகொள்ள முடியாது என்று மறுத்தார் என்றாலும் சரியல்ல. மேற்படி விபரங்களை போலிசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது எதிரியுடன் அசா.1 சமாதானமாகிவிட்ட படியால் எதிரியை இந்த வழக்கில் இருந்து விடுவிக்க வேண்டி பொய்சாட்சியம அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**